DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 25 /2019**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சூரியநாராயணன் | Father Name – | ராமலிங்கம் |
| Age | 65 | Village – | தேனி |
| | | Taluk – | தேனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. வழக்குரை சொத்தை பொறுத்து 20.12.2000ம் தேதி ஆங்கத்தேவரிடம் பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். வழக்குரை சொத்தை 25.08.1981ம் தேதி நாராயணசாமி மனைவி சுருளியம்மாள் வகையறாவிடமிருந்தும், 06.11.1981ம் தேதி நாகு செட்டியாரிடமிருந்தும் கிரையம் வாங்கினார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ஆங்கத்தேவர் 12.09.2001ம் தேதி இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்தை 2ம் பிரதிவாதிக்கு ஆங்கத்தேவரின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற அடிப்படையில் 03.08.2011ம் தேதி கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்குரை சொத்தின் சர்வே எண்.609 என்றால் சரிதான். சர்வே எண்.609 என்பது 2A, 2B, 2C என பிரிக்கப்பட்டு ராமலிங்கம், ஆங்கத்தேவர் மற்றும் ஜானகிராமன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆங்கத்தேவரின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற அடிப்படையில் ஆங்கத்தேவர் இறந்தபின்பு 2ம் பிரதிவாதிக்கு 03.08.2011ம் தேதி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை பொறுத்து வாதியின் தந்தை பெயரில் தான் பட்டா ஏற்பட்டு வாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எங்களுடைய எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.03.03 13:20:51 +0530

District Munsif,
Bodinayakanur.